நோயாளி தகவல் கையேடு

# நைட்ரோஃபுரன்டாய்ன்

## (NITROFURANTOIN)

MINISTRY OF HEALTH
SINGAPORE

SINGHEALTH / PIL / T116R0

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

**நைட்ரோ.ஃ.புரன்டாய்ன் (Nitrofurantoin) ஒரு ஆன்டிபயோடிக் மருந்தாகும். சிறுநீர்க் குழாயில் ஏற்படும் நுண்கிருமித் தொற்றுகளைத் தடுக்க, அல்லது அவற்றுக்குச் சிகிச்சை அளிக்க இது பயன்படுத்தப்படுகிறது.**

## மருந்தை நான் **எப்படி** பயன்படுத்த வேண்டும்?

கிருமித்தொற்றின் கடுமைக்கேற்ப, நீங்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார்.

இந்த மருந்தைப் பால் அல்லது உணவுடன் எடுத்துக் கொள்வது சிறந்தது. இப்படிச் செய்வதால் வயிறு பாதிப்பு குறைவதோடு, உடல் மருந்தை நன்றாக உறிஞ்சுவதற்கும் உதவுகிறது.

மருந்து எடுக்கத் தொடங்கிய சில நாட்களில் குணமடைய ஆரம்பித்தாலும் சிகிச்சையின் முழுக் காலத்திற்கும் மருந்தைத் தொடர்ந்து எடுத்து முடியுங்கள்.

இந்த மருந்தை அமில எதிர்ப்பு மருந்துகளோடு (antacids) உட்கொள்ளாதீர்கள். இம்மருந்து உடலில் உறிஞ்சப்படுவதை அவை குறைத்துவிடலாம்.

## மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை எடுக்காமல் விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை?

முகத்திலுள்ள தோல் நிறம் மாறுதல், நெஞ்சு வலி, குளிர் நடுக்கம், இருமல், காய்ச்சல், உடல் சுகமின்மை, தொண்டைக் கரகரப்பு, அரிப்பு, மூட்டு மற்றும் தசை வலி, மூச்சுத் திணறல், தோல் தடிப்புகள், சுவாசிப்பதிலும் விழுங்குவதிலும் திடீர் சிரமம், முகம், வாய், கை, கால்கள் வீங்குதல், மற்றும் சுவாசிக்கச் சிரமப்படுதல் போன்ற பக்க-விளைவுகள் ஏற்படலாம். இவை ஏற்பட்டால், உடனே மருத்துவரைப் பாருங்கள்.

குமட்டல், வயிற்றுப்போக்கு மற்றும் குதத்தில் வாயு பிரிதல் போன்றவையும் இருக்கலாம். இந்த மருந்து சிறுநீரைத் துரு-மஞ்சள் நிறத்திற்கு மாற்றிவிடலாம். இந்தப் பக்க-விளைவுகள் இருந்தால் பொதுவாக மருத்துவரைப் பார்க்கத் தேவையில்லை.

சிலருக்கு இந்த மருந்தினால் தற்காலிகமாக முடி கொட்டலாம்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

பின்வருபவை இருந்தால் மருத்துவரிடம் தெரிவியுங்கள்

- G6PD பற்றாக்குறை மற்றும் சிறுநீரகக் குறைபாடு போன்ற மருத்துவப் பிரச்சினைகள் இருத்தல்.
- நீரிழிவு நோய் இருத்தல். இந்த மருந்தினால் சிறுநீர் சீனிப் பரிசோதனைகளில் முடிவுகள் தவறாக வந்துவிடலாம். உங்களின் உணவுகளையும் நீரிழிவு நோய் மருந்து அளவுகளையும் மாற்றுவதற்கு முன்பாக மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.
- வேறு மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் உட்கொண்டு வருதல்.
- வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருத்தல், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்படுதல். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும்; முகம்/கண்கள்/உதடுகள் வீங்கும், மூச்சு விடச் சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.
- அறிகுறிகள் சில நாட்களில் மேம்படவில்லை அல்லது அவை மோசமாதல்
- நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வருதல், கர்ப்பமாக இருத்தல், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருத்தல்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்தைக் குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.